செய்தி வெளியீடு எண்: 855 நாள்: 30.11.2019

## பத்திரிக்கை செய்தி

ஹஜ் 2020–க்கான அனைத்து ஹஜ் விண்ணப்பங்களையும் ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறு மும்பை, இந்திய ஹஜ் குழு அறிவித்துள்ளது. ஆன்லைன் மூலம் ஹஜ் விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதற்கான கடைசி நாள் 05–12–2019 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆன்லைனில் விண்ணப்பங்களை நிரப்புவது கடினம் என்று நினைக்கும் புனிதப் பயணிகள் இந்திய ஹஜ் குழுவின் (www.hajcommittee.gov.in) இணைய தளத்தில் மாதிரி ஹஜ் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து தேவையான விவரங்களை பூர்த்தி செய்த பின், விண்ணப்பங்களுடன் கூடிய பாஸ்போர்ட் நகல், (20–01–2021 வரை செல்லத்தக்கது) வங்கி கணக்குப் புத்தகம், வெள்ளை நிற பின்னணியுள்ள புகைப்படம், முகவரி ஆதாரம் மற்றும் பணம் செலுத்திய விவரங்களை 5–12–2019 அல்லது அதற்கு முன் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும். புனிதப் பயணிகள் சார்பாக அவர்களுடைய விவரக் குறிப்புகளை ஆன்லைனில் விண்ணப்பிக்க தமிழ் நாடு மாநில ஹஜ் குழு ஏற்பாடு செய்யும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9